பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 11 சனிக்கிழமை 26.12.2020 கதிர் 281

## மதில் விழுந்து சிறுவன் சாவு!

அறபாநகரில் சோகம்

மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அறபாநகர் கிராமத்தில் மதில் விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று மாலை 2

# ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களை நினைவேந்தி தீபமேற்றினார் மஹிந்தர்



ஆழிப்பேரலையில் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இன்று தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் தீபமேற்றி அஞ்சலி செலுத்தினார்.

முதலில் சுனாமியில் உயிரிழந்தவர்களின் நினைவாக முற்பகல் 9.25 மணி முதல் முற்பகல் 9.27 வரையான இரு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்திய பிரதமர், அதனைத் தொடர்ந்து தீபமேற்றி உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தார்.

சுனாமிப் பேரழிவு இடம்பெற்று 2

## கொரோனாத் தொற்று அதியுச்சம்

# மூன்று வாரங்களுக்கு நாட்டை முடக்குங்கள்!

அரசிடம் சஜித் அணி அவசர கோரிக்கை



**கொரோனா வைரஸின் பேராபத்திலிருந்து மீண்டெழுவதற்காக நாடு முழுவதும் குறைந்தது மூன்று வாரங்களுக்காவது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.**

**- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா.** 2

## 2021இல் இலங்கையிலிருந்து 'கொரோனா'வை ஒழிப்போம்!

வருட இறுதியில் அரசு அறிவிப்பு

எதிர்வரும் 2021ஆம் ஆண்டில் கொரோனா வைரஸ் தொற்றை முற்றாக ஒழிப்போம் என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

பாணந்துறை பிரதேசத்தில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முழு நாட்டையும் முடக்காமல் பொருளாதார சந்தர்ப்பத்துக்கு மக்களுக்கு அரசு இடமளிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதிக்கு பின்னர் விமான நிலையத்தை வழமைக்குக் கொண்டு வர முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## கொழும்பில் நேற்று மட்டும் 300 பேருக்குக் கொரோனா

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதியில் இருந்து நேற்று வரை கொழும்பு மாவட்டத்தில் 17 ஆயிரத்து 86 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நேற்று மாத்திரம் 300 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2

## மகசின் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 48 அரசியல் கைதிகளுக்கும் கொரோனா உறுதி

வைத்தியசாலையில் உள்ள 14 பேரின் விபரம் வெளியீடு

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 48 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் நாட்பட்ட நோய்த் தாக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ள 14 பேர் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரங்களைக் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் கொரோனாத் தொற்று பல கொத்தணிகளாக உருவெடுத்து மிக வேகமாகப் பரவி பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. அந்த வகையில், சிறைச்சாலை கொரோனா கொத்தணி மூலம் இதுவரை 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகளுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு அவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். 5 கைதிகள் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். தமிழ் அரசியல் கைதிகள் 2

## கிறிஸ்மஸ் விபத்தில் 6 பேர் பரிதாபச் சாவு!

39 பேர் படுகாயம்

இலங்கையில் நத்தார் பண்டிகை நாளான நேற்று இடம்பெற்ற பல்வேறு வாகன விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரதிப்பொலிஸ்மாஅதிபரானபொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார். 2

## கிளிநொச்சியில் இன்று ஒருவர் வெட்டிக்கொலை

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், முழங்காவில் பொலிஸ் பிரிவில் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கொலைச் சம்பவம் இன்று காலை 10 மணியளவில் பல்லவராயன் கட்ட சோலை மாதிரி கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது செல்வரத்தினம் பிரதீபன் (வயது 32) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் 2

## மருதனார்மடம் கொத்தணி: சண்டிலிப்பாயைச் சேர்ந்த நால்வருக்கு கொரோனா!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மருதனார்மடம் பொதுச்சந்தைக் கொத்தணியில் புதிதாக நால்வர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். 2

## இலங்கைக்கான ரஷ்ய விமானங்கள் இரத்து உக்ரைன் பயணிகள் திங்கட்கிழமை வருகை

ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு வருகை தரவிருந்த விமானம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை விமான நிலையங்கள் சுற்றுலாப் பயணிகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை திறக்கப்படவுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றின் அச்சுறுத்தலால் மார்ச் மாதம் முதல் 2



## 248 பேர் இலங்கை திரும்பினர்; 343 பேர் வெளிநாடு சென்றனர்!

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்ப முடியாமலிருந்த மேலும் 248 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இன்று காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணிநேரத்துக்குள் இவர்கள் 9 விமானங்களில் நாடு திரும்பியுள்ளனர். இவர்களில் கட்டார் மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் உள்ளடங்குகின்றனர். இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் 343 இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இவர்களில் 130 பேர் ஜப்பானுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் இன்று ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலத்தின் கழுத்துப் பகுதியில் முறிவுகள் காணப்படுகின்றன எனவும், கால் பகுதியில் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சடலம் முழங்காவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்படவுள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் முழங்காவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சண்டிலிப்பாயைச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கிலுள்ள ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே குறித்த விபரங்கள் வெளியாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளானவர்கள் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## இலங்கைக்கான ரஷ்ய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுவரை கட்டுநாயக்க, பலாலி மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

எனினும், நாளை முதல் குறித்த விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்படுகின்றன.

இதனிடையே முதலாவது சுற்றுலாக் குழுவொன்று ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு வருகைதர அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் ரஷ்ய விமானங்கள் இலங்கைக்கான பயணங்களை இரத்துச் செய்துள்ளன என்று சிவில் மற்றும் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகமான ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நாளைமறுநாள் திங்கட்கிழமை உக்ரைனிலிருந்து இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக அறிவித்திருக்கும் சுற்றுலாக்குழுவின் வருகை மாற்றுத் திட்டமின்றி நிச்சயமாக இடம்பெறும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## கிறிஸ்மஸ் விபத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்துக்களில் 39 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அநாவசிய வாகனப் பிரயாணங்களை முடிந்த அளவில் வார இறுதி நாட்களில் தவிர்த்துக்கொள்ளும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கொழும்பில் நேற்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் தாக்கத்தால் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொழும்பில் சில பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று வாரங்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாம் அலை நாடெங்கும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. நாள்தோறும் சராசரி 500 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அதேவேளை, மரண எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனவே, இந்தப் பேராபத்திலிருந்து மீண்டெழுவதற்காக நாடு முழுவதும் குறைந்தது 3 வாரங்களுக்காவது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும்படி அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

கொரோனா வைரஸின் மூன்றாம் அலையின் ஆரம்பத்திலிலேயே கம்பஹா மாவட்டத்தை முடக்கம் செய்திருந்தால் நாடு முழுவதிலும் தொற்றுப் பரவாமல் தடுத்திருந்திருக்கலாம். ஆனால், அரசு அதைச் செய்யவில்லை என்பதால்தான் இந்தப் பேராபத்தை நாடு அரசு எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. - என்றார்.

## ஆழிப்பேரலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுடன் 16 ஆண்டுகளாகின்றன. அந்தக் கோரப் பேரழிவில் சுமார் 40 ஆயிரம் இலங்கையர்கள் உயிரிழந்தனர்.

பேரழிவில் பல அன்புக்குரியர்வர்கள் உயிரிழந்தது மாத்திரமின்றி, அவர்களது இருப்பிடங்களையும் இழந்து, அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கானோருக்கு தங்களது வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிக்கும் நிலை ஏற்பட்டது என இதன்போது பிரதமர் நினைவுகூர்ந்தார்.

இந்த நிகழ்வில் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

## மகசின் சிறையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்துவைக்கப்பட்டுள்ள கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் 810 கைதிகள் நோய்த் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

ஏனைய சிறைச்சாலைகளுடன் ஒப்பிடுகையில் மகசின் சிறைச்சாலையிலேயே தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்படுபவர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்தநிலையில், மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 48 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தது. இவர்களில், நீரிழிவு போன்ற தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அடங்கலாக, வைத்தியர் சிவரூபன், இந்து மதகுருவான இரகுபதி சர்மா உட்பட்ட 14 தமிழ் அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மருத்துவர் சின்னையா சிவரூபன், சி.ஐ. இரகுபதி சர்மா, எட்வேட் சாம் சிவலிங்கம், தங்க வேல் சிவகுமார், நாகலிங்கம் மதனசேகர், தேவசகாயம் உதயகுமார், குலசிங்கம் குலேந்திரன், றுபட்ன் யதுன், சேவியர் ஜோண்ன் டட்லி, தாவீதுநிமல்ராஜ்பிரான்சிஸ், விநாயகமூர்த்தி நெஜிலன், இரத்தினம் கிருஷ்ணராஜ், சின்னமணி தனேஸ்வரன், ஞானசேகரம் ராசமதன் ஆகியோரே சிறை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் குறைக்கும் முகமாக சில பொறிமுறைகளுக்கூடாக அரசு 6 ஆயிரம் கைதிகளை விடுவித்துள்ளது. ஆன போதிலும். அதில் ஒரு தமிழ் அரசியல் கைதியேனும் உள்வாங்கப்படவில்லை. இதனால், அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் மிகுந்த கவலைக்கு உள்ளாகியுள்ளனர் - என்றுள்ளது.

## மதில் விழுந்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை, நாசீவந்தீவைச் சேர்ந்த சிறுவன், தனது தாய் தொழில் நிமிர்த்தம் சவுதி அரேபியாவுக்குச் சென்ற நிலையில் அறபாநகர் பகுதியிலுள்ள தனது சகோதரியின் வீட்டில் வசித்து வந்த நிலையில் எதிர்வீட்டு மதில் சுவரைப் பிடித்து ஏறுவதற்கு முயற்சித்தபோது மதில் சிறுவன் மேல் விழுந்துள்ளது. இந்தநிலையில் குறித்த சிறுவனை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். வாழைச்சேனை நாசீவந்தீவு முருகன் ஆலய வீதியைச் சேர்ந்த கோபால் பிறேமசாந் என்ற 13 வயது சிறுவனே குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். சிறுவனின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியப் பங்களிப்புடன் காங்கேசன் துறைமுகம்!

“இந்தியாவுடன் சேர்ந்து காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய உத்தேசித்திருக்கிறோம். அப்பணி பூர்த்தியானதும் அப்பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு அங்கு வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

– இவ்வாறு கூறியிருக்கின்றார் துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன.

இவ்வாரம் வடக்கே வந்திருந்த அவர் காங்கேசன்துறை துறைமுக நிலைமையை நேரில் சென்று பார்வையிட்டார். அதன் பின்னரே மேற்படி கருத்தை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

இதிலும் ஒரு விடயம் உண்டு. காங்கேசன்துறைத் துறைமுகம் இந்தியாவுக்கு மிக நெருக்கமானது. இலங்கையின் வடக்கின் உச்சியில், தென்னிந்தியக் கரையை உரசியவாறு அது அமைந்துள்ளது.

பூகோள அரசியலில், இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மையப் புள்ளியில் உள்ளது. திருகோணமலை, காங்கேசன்முறை, மன்னார் போன்ற துறைமுகங்கள் சர்வதேச பாதுகாப்பு விவகாரத்தில் மிக தந்திரோபாயமான மையங்கள்.

அந்தப் பகுதிகளில் ஏற்படக் கூடிய ஒவ்வொரு அசைவும், அசுமாத்தங்களும் உணர்வுமிக்க அதிர்வுகளை ஏற்படுத்த வல்லவை.

ஹம்பாந்தோட்டைத் துறைமுகப் பகுதியை 99 ஆண்டு குத்தகைக்கு சீனாவுக்கு கொழும்பு அரசு வழங்கிய பின்புலத்தில் காங்கேசன்துறை துறைமுகம் உட்பட்ட பல கேந்திர முக்கியத்துவமான உணர்வுப் புள்ளிகள் குறித்து அதீத கவனிப்புக் காட்டப்பட்டு வருகின்றது.

காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி நடவடிக்கையை இந்தியா அல்லாத வேறு நாட்டுடன் சேர்ந்து மேற்கொள்வதில்லை, இந்தியாவுடன் இணங்கியே முன்னெடுப்பது என்ற மாறா நிலைப்பாட்டைத்தான் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னைய அரசு கைக்கொண்டிருந்தது. அதனை அவ்வப்போது பிரதிபலித்தும் வந்தது.

காங்கேசன்துறை துறைமுகம் தொடர்பில் இணக்கம் – ஒப்பந்தம் – விரிவான பேச்சு எதுவும் இந்தியத் தரப்புடன் முன்னெடுக்கப்படாவிட்டாலும், இந்தியாவை மீறி அங்கு எதுவும் செய்வதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே ரணிலின் நல்லாட்சி அரசு இருந்தது. அது, இந்தியாவுக்குப் புரிய வைக்கப்பட்டும் இருந்தது.

ஆனால் கடந்த நவம்பரில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இவ்விவகாரம் கிணற்றில் போட்டகல்லாகவே இருந்தது. எந்தப் பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை.

இவ்வார முற்பகுதியில் துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன யாழ் வந்து திரும்பிய போது, காங்கேசன்துறை துறைமுகத்தை நேரில் பார்வையிட்ட பின்னர், அது அபிவிருத்தி செய்யப்படும் என்று கூறினாரே தவிர, யாரின் உதவியுடன், எப்போது அபிவிருத்தி செய்யப்படும் என்ற எந்தத் தகவலையும் அவர் வெளியிடவில்லை.

வடக்கு விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய பின்னர், அங்கு வைத்து அந்தத் துறைமுகம் இந்திய உதவியுடன் மேம்படுத்தப்படும் என்ற தகவலை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

இந்தியாவுடன் இது குறித்து கொழும்பு விரிவான பேச்சுக்களை நடத்தி முடித்து விட்டதா, அபிவிருத்திப் பணி எப்போது தொடங்கும் என்பவை பற்றிய தகவல் ஏதும் இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

இந்திய உதவியுடன் – இன்னும் கொஞ்சம் விளக்கமாகவும், விரிவாகவும் கூறுவதானால் புதுடில்லியின் அழுத்தத்தினால் தான் – பலாலி விமான நிலையம் சீரமைக்கப்பட்டு, அது சர்வதேச விமான நிலையமாக்கப்பட்டு சேவையாற்றத் தொடங்கியது.

ஆனால், கொரோனாத் தொற்றினால் அதன் செயற்பாடு முடங்கிவிட்டது.

எனினும், கொரோனா முடக்கத்தின் பின்னரும் தெற்கின் கட்டுநாயக்கா விமான நிலையம், மத்தள விமான நிலையம் போன்றவற்றைத் திறந்து சேவைகளைத் துரிதப்படுத்த முயலும் அரசு, பலாலியைத் தொடர்ந்து முடக்கியே வைத்திருக்கின்றது.

அது மாத்திரமல்ல, விமானங்களின் வருகையை ஊக்குவிப்பதற்காக கட்டுநாயக்கா, மத்தள மற்றும் இரத்மலானை விமான நிலையங்களில் விமானங்கள் தரையிறங்குவதற்கான கட்டணத்தை நீக்கியுள்ள கொழும்பு, அந்த சகாயத்தைப் பலாலிக்கு இன்னும் வழங்கவேயில்லை.

கொரோனாத் தொற்று நெருக்கடி ஏற்பட முன்னர், பலாலி சர்வதேச விமான நிலையம் மீண்டும் உத்தியோகபூர்வமாக இயங்கத் தொடங்கிய பின்னர், பலாலிக்கு வந்து செல்லும் பயணிகளுக்கான விமானக் கட்டண அறவீட்டை மற்றைய விமான நிலையங்களுடன் ஒப்பிடுகையில் இரட்டை மடங்காக – இருநூறு வீதத்தில் – அரசு அறவிட்டமை நமக்குத் தெரிந்ததுதான்.

இப்போதும் கூட காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு என்பது வெறும் வாய்ப் பேச்சா அல்லது கொழும்பு அரசின் உண்மையான உள்ளக் கிடக்கையா என்பது தெரியவில்லை.

திட்டமும், நோக்கமும் அறிவிப்பும் சரி. அது செயற்படுத்தப்பட்டால்தான் உருப்படியான பயன் மக்களுக்குக் கிடைக்கும்.

## கொழும்பில் மாத்திரம் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு தொற்று 101 மரணங்கள்!

### மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு மாநகரசபை எல்லைப் பகுதிகளில் மாத்திரம் கடந்த வியாழக்கிழமை வரை 11ஆயிரத்து 226 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதுவரை 101 மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கொழும்பு மாநகர எல்லைக்குள் 58 ஆயிரத்து 35 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில், கடந்த வியாழக்கிழமை மாத்திரம் 950 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையுடன் 150 ரெபிட் என்டிஜன் பரிசோதனைகளும் இடம்பெற்றன.

அத்துடன், ஆரம்பத்தை விட ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற போதும் சில பிரதேசங்களில் இன்னும் கொரோனா பரவல் தொடர்ந்து இருந்துவருவதாக ரோஸி சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பண்டிகைக் காலத்தில் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்படுவதன் மூலமும் தேவையற்ற பயணங்களைக் குறைத்துக் கொள்வதன் மூலமும் இந்த நிலையைக் கட்டுப்படுத்தலாம் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் கொரோனாப் பரவலை அடுத்து அதிகரிப்பு!

### யுனிசெவ் நிறுவனம் சுட்டிக்காட்டு

இலங்கையில் கொரோனா பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன என யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

வழமையான வன்முறைச் சம்பவங்களை விட 40 வீதம் அதிகரித்துள்ளன என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு மார்ச் முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் இலங்கையில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கை மாத்திரமின்றி உலகம் முழுவதும் தொலைதூரக் கல்வி முறையினால் விளக்கமளித்தல் மற்றும் கலந்துரையாடும் சந்தர்ப்பம் இல்லாமையும் சில மாணவர்களுக்கு இணையத்தள வசதி இல்லாமையும் வன்முறைகள் அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலை போசாக்கு வேலைத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன என யுனிசெவ் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## சுகாதார வழிகாட்டுதலுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்!

### மீறினால் கைது

புதிதாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்குமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் சிலர் சுகாதார வழிகாட்டுதல்களைப் புறக்கணிக்கிறார்கள் என்பது தெரியவந்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண, பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ள சிலர் சுகாதார அதிகாரிகளுக்கு உதவவில்லை எனக் கூறினார்.

அவ்வாறு சுகாதார அதிகாரிகளின் உத்தரவுகளை நிராகரித்தால், அவர்கள் தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு அமைய கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு தனிமைப்படுத்தல் விதிகள் மற்றும் விதிமுறைகளை மீறியமைக்காக அட்டலுகமவில் உள்ள பலர் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கை பத்திரிகை நிறுவகப் பங்காளிகள் ஊடக அமைச்சர் கெஹெலியவுடன் பேச்சு!



இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பங்காளி அமைப்புக்கள் மற்றும் துணை நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழு இந்த வாரம் வெகுஜன ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுடன் சந்திப்பொன்றினை நடத்தியிருந்தனர்.

அமைச்சரால் முன்மொழியப்பட்ட ஊடக சீர்திருத்தங்களை உருவாக்கும் போது பங்குதாரர்களிடமும் ஆலோசனை கேட்குமாறு கேட்டுக்கொண்டனர்.

புத்தாண்டில் அவ்வாறு செய்வதாக அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

இந்தக் குழுவில் இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம், இலங்கை பத்திரிகையாசிரியர் கழகம், சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், தென்னாசிய சுதந்திர ஊடக சங்கம், முஸ்லிம் மீடியா போரம், ஊடக ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.




## சமூக நல அறிவிப்பு

**கொரோனாவில் இருந்து மக்களைக் காக்க போராடும் தன்னலமற்றோருக்கு நன்றிகள்..........**

கொரோனா பாதிக்கப்பட்டவர் 14 நாள்கள் தனிமை படுத்தப்பட்டிருக்கும் போது தீவிரமாக கண்காணிக்கப்படுவார். அவருக்கு வைரஸின் வீரியம் அதிகரிக்கிறதா, மூச்சுத்திணறல் பிரச்சினை ஏற்படுகிறதா வேறு உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படுகின்றனவா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. 14 நாள்களுக்குப் பிறகு நோயாளிக்கு வெவ்வேறு நாள்களில் 3 முறை பரிசோதனைகள் செய்யப் படும் இந்த சோதனைகளில் வைரஸ் நெகடிவ் என்று வந்தால் மட்டுமே அந்த நபர் முழுவதும் குணமடைந்தவர் என்று கருதப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்.

**கொரோனா அனர்த்தத்தில் அயராது பங்கெடுக்கும் வைத்தியர்கள், தாதியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார ஊழியர்கள் என மருத்துவ துறையில் தயக்கம் இன்றி துணிவோடும், அர்ப்பணிப்போடும், செயற்படும் இவர்கள் மக்கள் முன் மகத்தான மனிதர்களாக கொள்ளப்பட வேண்டியவர்கள் இவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளை கூறுகின்றோம்.**







**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**




# அசுர வேகத்தில் சீன பொருளாதார வளர்ச்சி: அமெரிக்காவுக்கு அதிர்ச்சி அறிக்கை வந்தது!

உலகளாவிய கொவிட் - 19 தொற்றுநோய்களின் போது தனது போட்டியாளரை விஞ்சி இந்த தசாப்தத்தின் இறுதிக்குள் உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக அமெரிக்காவை முந்தி சீனா வரும் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

2028 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பொருளாதாரத்தை விட டொலர்களில் அளவிடப்படும் போது சீனாவின் பொருளாதாரத்தின் மதிப்பு அதிகரித்திருக்கும் என்று பொருளாதாரம் மற்றும் வணிக ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

193 நாடுகளின் வளர்ச்சி வாய்ப்புகளின் வருடாந்த லீக் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பிரிட்டனை தளமாகக் கொண்ட ஆலோசனைக் குழு, கொவிட் - 19 இன் விளைவுகளிலிருந்து சீனா விரைவாக முன்னேறி வருவதாகவும், 2020 ஆம் ஆண்டில் 2% வளர்ச்சியடையும் என்றும், இது ஒரு பெரிய உலகப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதாகவும் கூறியுள்ளது.

இந்த ஆண்டு அமெரிக்கா 5% சுருங்குவதாக எதிர்பார்க்கப்படுவதால், சீனா தனது மிகப்பெரிய போட்டியாளருடனான இடைவெளியைக் குறைக்கும் என்று CEBR தெரிவித்துள்ளது.



ஒட்டுமொத்தமாக, உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி இந்த ஆண்டு 4.4% குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

CEBR இன் துணைத் தலைவரான டக்ளஸ் மெக் வில்லியம்ஸ் இது தொடர்பில் கூறியவை வருமாறு:-

இந்த கணிப்பில் உள்ள பெரிய செய்தி சீனப் பொருளாதாரம் அசுர வேகத்தில் வளர்ச்சியடைவதாகும்.

தற்போதைய ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2020 - 25) இது உயர் வருமான பொருளாதாரமாக மாறும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஒரு வருடத்திற்கு முன்பு செய்ததை விட ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவை அது முறியடிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். - என்றார்.

உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சீனாவின் பங்கு 2000 இல் 3.6 சதவீதத்திலிருந்து 2019 இல் 17.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மேலும் இது தொடர்ந்து வளர்ச்சியடையும் என்று தெரிவித்துள்ளது.

இது தனிநபர் வரம்பை, 12,536 (£ 9,215) கடந்து 2023 இற்குள் அதிக வருமானம் பெறும் நாடாக மாறும்.

அப்படியிருந்தும், சீனாவின் வாழ்க்கைத் தரம் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளை விட மிகக் குறைவாகவே இருக்கும்.

## லத்தீன் அமெரிக்க நாடுகளில் தடுப்பூசி போடும் பணி தீவிரம்!

உலகில் கொரோனா வைரஸ் தொற்றால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான லத்தீன் அமெரிக்க நாடுகளில், தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

லத்தீன் அமெரிக்காவிலேயே மிக அதிகமாக கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கையைக் கொண்டுள்ள மெக்ஸிகோவில், பொதுமக்களுக்கு தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும் செவிலி மரியா இரேனே ரமீரெஸுக்கு முதல் தடுப்பூசி போடப்பட்டது.

அமெரிக்காவின் பைஸர் நிறுவனமும் ஜேர்மனியின் பயோஎன்டெக் நிறுவனமும் கூட்டாக உருவாக்கிய கொரோனா தடுப்பூசி மெக்ஸிகோ மக்களுக்குப் போடப்படுகிறது. இதற்காக, முதல் கட்டமாக 3 ஆயிரம் தடுப்பூசிகளை மெக்ஸிகோ அரசாங்கம் பெல்ஜியத்திலிருந்து தருவித்துள்ளது. மொத்தம் 3.4 லட்சம் தடுப்பூசிகளை வாங்க அந்த நாட்டு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அடுத்த ஆண்டின் முதல் 3 மாதங்களுக்குள் கொரோனாவுக்கு எதிராகப் போராடி வரும் அனைத்து சுகாதாரத் துறைப் பணியாளர்களுக்கும் தடுப்பூசி செலுத்த அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதத்திலிருந்துதான் பொது மக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் பணிகளைத் தொடங்க முடியும் என்று அறிவித்துள்ளது.

மெக்ஸிகோவில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் தொடங்கிய சில மணி நேரங்களில், மற்றொரு லத்தீன் அமெரிக்க நாடான சிலியிலும் தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

சிலியைத் தொடர்ந்து, அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த கோஸ்டாரிகாவிலும் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதல்முறையாக, 91 வயது மூதாட்டி எலிசபெத் கேஸ்டிலோ உள்ளிட்ட இரு முதியவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

இந்த நாடுகளைத் தவிர, ஆர்ஜெண்டீனாவும் இன்னும் சில நாள்களில் பொதுமக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி போடும் திட்டத்தைத் ஆரம்பிக்க விருப்பதாகத் தெரிவித்துள்ளது. அந்த திட்டத்தின் முதல்கட்டத்தை செயற்படுத்துவதற்காக, ரஷ்யாவின் 3 லட்சம் ஸ்புட்னிக் - 5 தடுப்பூசியை அந்த நாடு தருவித்துள்ளது.

## சவுதி அரேபியா பட்டத்து இளவரசருக்கு தடுப்பூசி முதல் டோஸ் செலுத்தப்பட்டது!



சவுதி அரேபியா பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுக்கு கொரோனா தடுப்பூசிக்கான முதல் டோஸ் உட்செலுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட தேசிய தடுப்பூசி திட்டத்தின் ஒரு பகுதியாக, இளவரசர் முகமது பின் சல்மானுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக சவுதி பத்திரிகை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சுகாதார அமைச்சர் தவ்ஃபிக் அல் - ரபியா, 'குடிமக்களுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் தடுப்பூசிகளை வழங்குவதில் அவரது ஆர்வம் மற்றும் தொடர்ச்சியான பின்தொடர்தலுக்கு நன்றி.

தொற்றுநோயின் ஆரம்பத்திலிருந்து இராச்சியம் அடைந்த லாபங்கள் குறித்து இன்று நாம் காண்பது விஷன் 2030ஆம் ஆண்டுக்குள் மிக முக்கியமான கொள்கைகளில் ஒன்றின் விரிவாக்கமாகும், இது குணப்படுத்துவதை விட தடுப்பு சிறந்தது.

மக்களின் ஆரோக்கியத்திற்கு முதலிடம் கொடுக்கும் அதே வேளையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதன் மூலம் இது கொண்டு வரப்பட்டது.

குடிமக்களுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் வழங்குவதற்காக பாதுகாப்பான மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசியை பதிவு நேரத்தில் வழங்க அரசாங்கம் செயற்பட்டுள்ளது. இது கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கையாள்வதில் ராஜ்யத்தை உலகின் மிகச் சிறந்த நாடுகளில் ஒன்றாக மாற்றியது' என கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து சவுதி அரேபியாவில் கொவிட் -19 தடுப்பூசி எடுக்க 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர் என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## உலகளவில் கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை 8 கோடியை கடந்தது!

உலகளவில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பெருந் தொற்றினால், பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை எட்டு கோடியை கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, வைரஸ் தொற்றினால் எட்டு கோடியே இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை கொரோனா வைரஸ் தொற்றினால் பீடிக்கப்பட்ட 17 லட்சத்து 57ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஐந்து கோடியே 64 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

உலகளவில் கொவிட் - 19 தொற்றினால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல் நாடாக அமெரிக்கா விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.


அமரர் பேனாட் மதுரநாயகம் நினைவுக் கவிதைப் போட்டி

போட்டி 2 பிரிவுகளாக நடைபெறும்

1. பாடசாலை மாணவர்களுக்கானது (தரம் 1 முதல் 12 வரை) "கை கழுவினார்கள்....."

2. பெரியவர்களுக்கானது (வயது எல்லை கிடையாது) "முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்...."

பரிசுத் தொகை:

| பாடசாலை மணவர்களுக்கு | பெரியவர்களுக்கு |
|---|---|
| 1ம் பரிசு - 3000/= | 1ம் பரிசு - 5000/= |
| 2ம் பரிசு - 2000/= | 2ம் பரிசு - 3000/= |
| 3ம் பரிசு - 1000/= | 3ம் பரிசு - 1000/= |

- 30 வரிகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.
- புதுக்கவிதையாக / மரபுக்கவிதையாக இருக்கலாம்.
- நிச்சயமாக சுயமாக எழுதி, தனது சொந்த கையெழுத்துடன் அனுப்பிவைக்க வேண்டும்.

நோக்கம்: - காலச் சூழ்நிலையில் விடுமுறைப்பொழுதில் மனதை ஒருமுறை மகிழ்விக்க

இறுதித் திகதி: - 31.12.2020

போட்டி முடிவுகள் 14.01.2021 பொங்கல் தினத்தன்று காலைக்கதிர் பத்திரிகையில் வெளியிடப்படும்.

உங்கள் ஆக்கங்களை எமக்கு தபால் மற்றும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கவும்.

ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி

தபால்: - அமரர் பேனாட் நினைவுக் கவிதைப்போட்டி, காலைக்கதிர், இல. 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்: - kalaikkathiradvt@gmail.com


## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 27.12.2020 | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 10 கத்தோலிக்கம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 கத்தோலிக்கம் (2ஆம், 4ஆம்) |
| 06.00 - 06.55 | தரம் - 10 சைவநெறி (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 சைவநெறி (2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 10 வரலாறு (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 வரலாறு (2ஆம், 4ஆம்) |
| 11.00 - 11.55 | தரம் - 10 இஸ்லாம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 இஸ்லாம் (2ஆம், 4ஆம்) |
| 12.00 - 12.55 | தரம் - 03 தமிழ் |
| 12.30 - 12.25 | தரம் - 03 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 13.00 - 13.25 | தரம் - 04 கணிதம் |
| 13.30 - 13.55 | தரம் - 04 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 14.00 - 14.25 | தரம் - 05 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் ஆங்கிலம் (2ஆம், 4 ஆம் |
| 14.30 - 14.55 | தரம் - 05 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 18.00 - 18.55 | தரம் - 10 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 23.30 - 24.30 | தரம் - 10 கிறிஸ்தவம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 கிறிஸ்தவம் (2ஆம், 4ஆம்) |

## டெல்லியில் இராணுவ வீரர்கள் 150 பேருக்கு கொரோனா..!



குடியரசு தின மற்றும் இராணுவ தின அணிவகுப்புகளுக்காக டெல்லிவந்த இராணுவ வீரர்களிடம்நடத்தப்பட்ட பரிசோதனையில் 150 பேருக்கு கொரோனா உறுதியாகியுள்ளது.

ஆண்டுதோறும் ஜனவரி 26 ஆம் திகதி குடியரசு தின அணிவகுப்பு, இராணுவ அணிவகுப்பு ஜனவரி 15 ஆம் திகதி டெல்லியில் நடத்தப்படும். இந்த ஆண்டுக்கான அணிவகுப்புகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில், அதில் கலந்து கொள்ள ஆயிரக்கணக்கான வீரர்கள் டெல்லி வந்துள்ளனர்.

அவ்வாறு டெல்லி வந்த வீரர்களுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில், 150 பேருக்கு கொரோனா உறுதியாகியிருப்பதாகவும், அறிகுறிகள் இல்லாததால், டெல்லி கன்டோன்மென்ட் பகுதியில் அவர்கள் தனிமைபடுத்தப்பட்டு உள்ளனர் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


# அச்சப்படும் அளவிற்கு சிக்கல் எதுவும் ரஜினிக்கு இல்லையாம்

## தெளிவுபடுத்தியது அப்பலோ மருத்துவமனை

நடிகர் ரஜினிகாந்தின் உடல் நிலை முன்னேற்றம் அடைந்து வருவதாக ஹைதராபாத் அப்பலோ மருத்துவமனை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், ரஜினியின் இரத்த அழுத்தம் இன்னும் அதிகமாகவே இருப்பதாகவும், இருப்பினும் நேற்றைய நிலையுடன் ஒப்பிடும் போது கட்டுக்குள் இருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், ரஜினியின் உடல்நிலையில் எச்சரிக்



கத்தக்க வகையில் எந்த பாதிப்பும் இல்லை என்றும், இன்று மேலும் சில பரிசோதனைகள் அவருக்கு மேற்கொள்ளப்பட்டு மாலை முடிவுகள் தெரியவரும் என்றும் அப்பலோ மருத்துவமனை கூறியுள்ளது.

இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த ரஜினிக்கு கவனமாக மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன எனவும், தொடர்ந்து அவர் மருத்துவக் கண்காணிப்பில் இருக்கிறார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரத்த அழுத்தத்தில் மாறுபாடுகள் ஏற்படக் கூடும் என்பதால், முழு ஓய்வில் இருக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், அவரைச் சந்திக்க பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை என்றும் அப்பலோ திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

# 'லவ் ஜிகாத்'தில் ஈடுபட்டால் 10 ஆண்டுகள் வரை சிறை!

## மத்தியப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல்



லவ் ஜிகாத்தில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கும் மசோதாவுக்கு மத்திய பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மாற்று மதத்தினரை திருமணம் செய்வதற்காக, கட்டாயபடுத்தி மதமாற்றத்துக்கு உட்படுத்தப்படுவது 'லவ் ஜிகாத்' என்று குற்றம்சாட்டப்பட்டு வருகிறது. இத்தகைய செயலில் ஈடுபடுவதை குற்றமாக கருதும் மசோதாவுக்கு மத்திய பிரதேச மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிற மதத்தினரை கட்டாயபடுத்தி மத மாற்றம் செய்து திருமணம் செய்தால் 1 முதல் 5 ஆண்டுகள் வரையும், எஸ்சி அல்லது எஸ்டி பிரிவினரை கட்டாயபடுத்தி மதமாற்றம் செய்து திருமணம் செய்தால் 2 முதல் 10 ஆண்டு வரை சிறை தண்டனையும் விதிக்க வகை செய்யப்பட்டிருப்பதாக மத்திய பிரதேச உள்துறை அமைச்சர் நரோட்டம் மிஸ்ரா குறிப்பிட்டார்.

# உண்டியலில் நாலரைக் கோடி ரூபா திருப்பதியில் நேற்று மட்டும் வசூல்!

திருப்பதி,டிசெ.26

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நேற்று ஒரே நாளில் இந்தியப் பணத்தில் 4 கோடியே 39 லட்சம் ரூபா உண்டியல் காணிக்கையாக செலுத்தப்பட்டுள்ளது.



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அமல்படுத்தப்பட்ட ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்ட பிறகு கோவில்களுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இருப்பினும் திருவிழா காலங்களில் அரசு விதித்துள்ள கட்டுப்பாட்டு நெறிமுறைகளான சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் உள்ளிட்டவற்றை பின்பற்றி பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நேற்று வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, சொர்க்கவாசல் திறக்கப்பட்டது. கொரானா ஊரடங்கு தளர்வுக்கு பிறகு குறைந்த அளவிலேயே பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று ஒரே நாளில் 42 ஆயிரத்து 825 பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

இதன் மூலம் நேற்று ஒரே நாளில் மட்டும் 4 கோடியே 39 லட்சம் ரூபா உண்டியலில் காணிக்கையாக கிடைக்கப்பெற்றுள்ளது.

இன்று வைகுண்ட துவாதசியையொட்டி, இன்று காலை ஏழுமலையான் கோயில் தெப்பக்குளத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் விதமாக பக்தர்கள் இல்லாமல் அதிகாரிகள், அர்ச்சகர்கள் மட்டுமே பங்கேற்று சக்கரத்தாழ்வார் தீர்த்த வாரி நடத்தினர்.

# ஒட்டோவைப் பந்தாடிய லொறி தெலுங்கானாவில் ஐவர் சாவு!

தெலுங்கானா மாநிலம் விகாரபாத் மாவட்டத்தில் ஓட்டோ மீது லொறி மோதிய விபத்தில் நான்கு பெண்கள் உட்பட ஐந்து பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தெலுங்கானா மாநிலம் விகாராபாத் மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் பருத்தி வயலில் வேலை செய்வதற்காக ஓட்டோவில் பெண்கள் உட்பட வேலையாள்கள் சென்றுள்ளனர். காலை உணவை முடித்து விட்டு வருவதாக ஓட்டோவை சாரதி சாலையில் வண்டியை நிறுத்தி விட்டு வீட்டிற்குச் சென்றுள்ளார்.

அப்போது வேகமாக வந்த லொறி ஓட்டோ மீது மோதியது. இதில் நான்கு பெண்கள் உட்பட ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்

# 40 தொன் எடையில் 21 அடி உயர காளி சிலை 5 கிரேன்கள் உதவியுடன் ஆந்திரா புறப்பாடு!



சென்னை அருகே 40 தொன் எடை கொண்ட காளி சிலை 5 கிரேன்கள் உதவியுடன் லொரியில் ஏற்றி ஆந்திரா அனுப்பி வைக்கப்பட்டது.

தேவகோட்டையை சேர்ந்த ஸ்தபதி முத்தையா சபாபதி செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த பழைய மாமல்லபுரம் சாலை கேளம்பாக்கம் அருகே கடந்த 35 ஆண்டுகளாக ஸ்வர்ணம் சிற்பக்கலைக் கூடத்தை நடத்தி வருகிறார். இங்கு, நூற்றுக்கும் மேற்பட்டோர் இளைஞர்களும், சிற்ப கலைஞர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த கலைக்கூடத்தில் மிக பிரம்மாண்டமான 40 தொன் எடையும், 21 அடி உயரம் கொண்ட ஒரே கல்லில் செதுக்கப்பட்ட 18 கைகள் கொண்ட காளி சிலை செதுக்கப்பட்டு வந்தது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திரா மாநிலம், பிரகாசம் மாவட்டம் திரிபுரந்தாக்கம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ராம கிருஷ்ணா கபாலிக் தப்போ சித்தா ஆசிரமத்தில் வைப்பதற்காக காளிதேவி சிலை செய்யக் கட்டளை கொடுக்கப்பட்டது.

தற்போது, பிரமாண்டமாக காளி தேவி சிலை தயாராகிவிட்டது.

இதையடுத்து, காளிதேவி சிலையை கொண்டு செல்வதற்காக கபாலிக் தப்போ சித்தா ஆசிரம நிர்வாகிகள் வருகை தந்தனர். காளி தேவி சிலைக்கு ஆடுகள், கோழிகள், பலியிடப்பட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. பிறகு, 5 கிரேன்கள் உதவியுடன் பிரமாண்ட காளிதேவி சிலை தூக்கப்பட்டு டார்ரஸ் லொறியில் ஏற்றி ஆந்திரா அனுப்பி வைக்கப்பட்டது. ஜனவரி முதலாம் திகதி இந்த காளி சிலை கபோலிக் தப்போ சித்தா ஆசிரமத்தில் நிர்மாணிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் ஒன்றரை லட்சம் பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்று மடத்தின் நிர்வாகிகள் கூறுகிறார்கள்.


# கல்யாணமாலை

## வட சர்வதேச திருமண சேவை





**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1985.05.29
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - சுவாதி
செவ் - 1 இல்
பாவம் - 78
கல்வி - BSC, Q.S Engineering
தொழில் - Engineer
எதிர்பார்ப்பு - Q.S Engineer அல்லது Doctor

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1985.10.21
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - திருவோணம்
பாவம் - 14
செவ் - ------
கல்வி - பட்டதாரி
தொழில் - சுகாதார திணைக்களம்
எதிர்பார்ப்பு - அரச தொழில்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528




# ‘புரெவி’ புயலினால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்





புரெவி புயலினால் பாதிக்கப்பட்ட இருபாலை தெற்கு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நத்தார் பண்டிகை தினமான நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில், கனடா உதயம் கலாச்சார நிறுவனத்தின் அனுசரனையுடன் புரெவி புயல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 80 மாணவர்களுக்கே இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க பொது மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு. பா. பிரதீபன் அவர்களின் தலைமையில் சுகாதார நடைமுறைகளிற்கு அமைவாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதயம் கலாசார நிறுவனத்தின் இணைப்பாளர் தி.நிஷாங்கன், கிராம சக்தி மக்கள் சங்கத்தின் தலைவர் மு.தவசீலன், மாதர் சங்கத்தின் தலைவி திருமதி.த. சரோஜாதேவி, பிரதேச சபை உறுப்பினர் ந. கஜேந்திரகுமார், கமக்காரர் அமைப்பின் தலைவர் த. தர்சன், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ப. ருசியந்தன், பொருளாளர் செ.வசந்தகுமார், சமூக சேவையாளர் சோ.சந்திரகுமார், ஊடகவியலாளரும் சமூக சேவையாளருமான த.சாமிலன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி நிகழ்வை ஒழுங்கமைப்பு செய்வதற்கு பூரண ஆதரவு நல்கிய மு.சுந்தரலிங்கம் அவர்களுக்கு பொது அமைப்புக்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# பயணிகள் மீதான சோதனையில் 23 பேருக்குக் கொரோனா உறுதி

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பயணிகள் தொடர்பில் 11 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ரெப்பிட் என்டிஜன் சோதனையில், இதுவரை 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சோதனையின் போது, பாடசாலை மாணவர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இந்த மாணவரின் தந்தை, களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் நிலையில், குறித்த பொலிஸ் நிலையத்தில் மேலும் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் அண்மையில் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பயணிகள் தொடர்பில் 11 இடங்களில் மேற்கொள்ளப்படும் ரெப்பிட் என்டிஜன் சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய கொள்கைகளுக்கான அடித்தளத்தை அமைப்பதில் ஜனாதிபதி வெற்றிபெற்றுள்ளார்

## பௌத்த ஆலோசனை சபைத் தெரிவிப்பு

தடைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் கடந்த ஆண்டு பல தேசிய கொள்கைகளுக்கான உறுதியான அடித்தளத்தை அமைப்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார் என்று பௌத்த ஆலோசனை சபை தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை 7 ஆவது முறையாக ஜனாதிபதி அலுவலகத்தில் கூடிய பௌத்த ஆலோசனை சபை கூட்டத்தின் போதே தேரர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

நாட்டின் பெரும் எண்ணிக்கையான மக்களின் எதிர்பார்ப்பாகவிருந்தது ஒரு தேசிய சிந்தனையின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் ஒரு தலைமையாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தொழில்கள் மற்றும் சலுகைகள் போன்ற குறுகிய விடயங்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அத்தகையவர்களின் ஆதரவை எதிர்பார்க்கவில்லை என்று மகா சங்கத்தினர் நினைவு கூர்ந்தனர்.

2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் வீழ்ச்சியடைந்த தேசிய பாதுகாப்பு, போதைப்பொருள் மற்றும் பாதாள உலக நடவடிக்கைகளிலிருந்து விடுபட்ட ஒழுக்கமான சமூகம், வீண் விரயம் மற்றும் ஊழலை ஒழித்தல், திறமையான அரச சேவை மற்றும் நாட்டின் தனித்துவத்தை பாதுகாக்கும் வெளியுறவுக் கொள்கை என்பனவே மக்களின் அபிலாஷைகளாக இருந்தன என்றும் தேரர்கள் வலியுறுத்தினர்.

கொவிட் தொற்று உட்பட பல தடைகளுக்கு மத்தியில், தேசிய கல்வி கொள்கை, தேசிய மரபுரிமைகளை பாதுகாக்கும் திட்டம் மற்றும் புதிய அரசமைப்பு உள்ளிட்ட நாட்டின் போக்கை மாற்றும் ஒரு திட்டத்திற்கு அடித்தளம் அமைத்ததற்காக மகா சங்கத்தினர் ஜனாதிபதியைப் பாராட்டினர்.

மகாசங்கத்தினர் விரும்பிய பௌத்த தனித்துவத்திற்கு முன்னுரிமை அளித்து, ஏனைய சமய சகவாழ்வுக்கான சமூக சூழலை அமைத்தமை இக்காலப்பகுதியில் மக்கள் அடைந்த மற்றுமொரு வெற்றியாகும். இதை மேலும் முன்னெடுத்துச் செல்ல அனைத்து சமயத் தலைவர்களையும் கொண்ட ஒரு குழுவின் அவசியத்தையும் தேரர்கள் சுட்டிக்காட்டினர். – என்று தெரிவிக்கப்பட்டது.

# மட்டக்குளி பெண்ணின் ஜனாஸா அடக்கம் வர்த்தமானி அறிவித்தல் மீறப்பட்டுள்ளதா?

கொழும்பு 15 மட்டக்குளியை சேர்ந்த பெண் ஒருவர், கொரோனா தொற்றினால் மரணித்தார் எனவும், அவரது ஜனாஸா கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதான சட்ட வைத்திய அதிகாரியின் உத்தரவுக்கு அமைய உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, வர்த்தமானிக்கு புறம்பாக அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கேகாலையில் செய்தியாளர் சந்திப்பை நடத்தி, சிங்ஹலே நாம் அமைப்பின் தலைவர் ஜம்புரேவல சந்தரதன தேரர் இது தொடர்பில் கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி மீது குற்றம் சுமத்தினார்.

இந்நிலையில் மட்டக்குளி பெண்ணின் மரணம் தொடர்பிலும் அவரது ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டமை தொடர்பிலும் கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி விடே வைத்திய நிபுணர் அஜித் தென்னகோன் மீது குற்றம் சுமத்தப்படும் நிலையில், அவர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்தார்.

கொவிட் தொற்றினால் உயிரிழந்த எந்த ஒருவரின் சடலத்தையும் அடக்கம் செய்வதற்காக, வர்த்தமானிக்கு அப்பால் சென்று தான் அனுமதியளிக்கவில்லை என அவர் கூறினார்.

கடந்த 12 ஆம் திகதி மாலை, கொழும்பு 15 மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 69 வயதான பெண் ஒருவர் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

அதன் பின்னர் அவரது சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையிலேயே வீட்டில் அப்பெண் மரணித்துள்ளார். குறித்த பெண்ணின் சடலம் மீது, கடந்த 14 ஆம் திகதி பிரேத பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பிரேத பரிசோதனைக்கு முன்னர், 13 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் அச்சடலத்துக்கு கொரோனா தொற்று உள்ளதாக கண்டறியப்பட்டதாக அப்பெண் தொடர்பில் வெளியிடப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பிரேத பரிசோதனை அறிக்கை பிரகாரம், அந்தப் பெண் 17 வருடங்களாக நீரிழிவு நோயினால் அவதியுற்று வந்துள்ளார் எனவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த நவம்பர் 29 ஆம் திகதி அப்பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு முன்னெடுத்த பி.சி.ஆர். பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதியான நிலையில், அங்கிருந்து அவர் அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந் நிலையில் அங்கு கடந்த டிசெம்பர் 10 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில், அவரது உடலில் வைரஸுக்கு எதிரான தாக்கங்கள் உள்ளமை உறுதி செய்யப்பட்ட நிலையில் மீள கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந் நிலையில் அவர் டிசெம்பர் 11 ஆம் திகதி தேசிய வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளமையுடன், மறுநாள் அதாவது கடந்த 12 ஆம் திகதி வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

அவர் தொடர்பில் மரணத்தின் பின்னர் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலும் கொவிட் 19 தொற்று அவரது சடலத்தில் உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இந் நிலையில் இது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரி, வைத்திய பரிசோதனை நிலையம் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய வைரஸ் தொடர்பிலான விஷேட நிபுணர்கள் மற்றும் தொற்று நோய் தடுப்புப் பிரிவினருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதன்படி குறித்த சடலம் நோய் காவியாக இருக்காது என முடிவெடுக்கப்பட்ட நிலையில், குறித்த மரணம் கொவிட் தொற்றினால் ஏற்பட்ட மரணம் அல்ல என பிரேத பரிசோதனைகளில் தீர்ப்பளிக்கப்பட்டது. அதன்படியே சந்தேகத்துக்கு இடமான எந்த காரணிகளும் இல்லை என்பதால், சடலம் இறுதிக் கிரியைகளுக்காக உறவினர்களிடம் கையளிக்கலாம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனை ஒத்த சம்பவமொன்று கடந்த 13 ஆம் திகதி அஹுங்கல்லை பகுதியிலும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இணையவழிக் கல்வியை முறைப்படுத்த செயற்றிட்டமொன்று உருவாக வேண்டும்!

## ‘சிவில் அபி’ அமைப்பு வலியுறுத்து

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிக்கு மத்தியில் மாணவர்களுக்கு முறையான இணையவழிக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் தோல்வி கண்டிருக்கிறது. இணையவழிக் கல்வியை முறைப்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பு கல்வியமைச்சருக்கு இருக்கிறது என ‘சிவில் அபி’ என்ற அமைப்பின் தலைவர் கபில ராஜபக்ஷ வலியுறுத்தியிருக்கிறார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

எமது நாட்டின் சிறுவர்களை எதிர்காலத்துக்கு முகங்கொடுப்பதற்குத் தயார்ப்படுத்தும் நோக்கிலேயே சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவினால் இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த இலவசக்கல்வியின் ஊடாகப் பயன்பெற்ற ஒருவர்தான் தற்போது நாட்டின் கல்வியமைச்சராக இருக்கின்றார்.

இந்நிலையில் கடந்த வருடம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களின் பின்னரும் இவ்வருடம் கொரோனா வைரஸ் பரவலின் பின்னரும் நாட்டின் மாணவர்களுக்கான இலவசக்கல்வி உரிமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுவழியே இணையவழிக் கல்வி ஆகும்.

இணையவழிக்கல்வி என்பது எமது நாட்டிற்குப் புதிதல்ல. ஆனால் அக்கல்வி முறையை அறிமுகப்படுத்தும்போது, அதற்கான அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகளும் வழங்கப்படுவதை கல்வியமைச்சு உறுதிசெய்யவில்லை.

தற்போது அந்தப் பொறுப்பு பெற்றோர்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளது. இணையவழிக் கல்வியை அறிமுகம் செய்யும்போது அதற்கு அவசியமான சிமாட் கையடக்கத் தொலைபேசி, டெப், மடிக்கணினி, இணையவசதி போன்றவற்றைக் குறைந்த செலவில் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஆகவே மாணவர்களுக்கு முறையான இணையவழிக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் தோல்வி கண்டிருக்கிறது. இலவசக்கல்வியின் ஊடாக இப்போது கல்வியமைச்சராக மாறியிருக்கும் ஜீ. எல். பீரிஸ் இணையவழிக்கல்வியை முறைப்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கின்றார். எனவே கல்வித்துறையுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி, குறைபாடுகளற்ற இணையவழிக் கல்வி முறையொன்றை அறிமுகம் செய்வதற்குக் கல்வியமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.





மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=





கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.12.2020 இல் வெளியிடப்பெற்றது.